செய்தி வெளியீடு எண்–589 நாள்–21.7.2008

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் ‘‘கலைஞர் கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை’’ மூலம் பயன்மிக்க கல்வெட்டுகளை ஆய்வு செய்வோருக்கு விருதுகள் வழங்கிட சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

சென்னைக் கடற்கரை காமராசர் சாலையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அலுவலகத்தை 30.6.2008 திங்கட்கிழமையன்று திறந்து வைத்துப் பெருமிதம் அடைந்த தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,

> ‘‘செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழகத்தில் காலூன்றுகின்ற நாள், பரிதிமாற்கலைஞர் அவர்கள் 150 ஆண்டுகளுக்கு முன்பு கண்ட கனவு – அந்தக் கனவு நனவாக வேண்டுமென்று 50 ஆண்டுகளுக்கு முன்பே நான் கொண்ட நினைவு இன்று செயலாக்கம் பெறுகின்றது. இதையொட்டி, எனக்கென்று உள்ள சொந்தப் பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாயை இந்த நிறுவனத்தின் பொறுப்பில், – ‘கலைஞர் கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை’ ஒன்றினை நிறுவிட வழங்குகின்றேன். இந்த ஒருகோடி ரூபாயை நிரந்தர வைப்புத் தொகையில் அறக்கட்டளையின் பெயரால் டெபாசிட் செய்யப்பட்டு, ஆண்டுதோறும் அந்தத் தொகைக்குக் கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் இந்த மையத்தில் சிறப்பாகத் தமிழக வரலாற்றுப் பயன்மிக்க கல்வெட்டுகளை ஆய்வு செய்வோருக்கு விருதுகள் மற்றும் பொற்கிழிகள் வழங்கப்படும்’’

– என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் முகத்தான், தமது சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய்க்கான காசோலையைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் முனைவர் பி.மருதநாயகம் அவர்களிடம் முதலமைச்சர் கலைஞர் இன்று (21.7.2008) வழங்கினார். இந்நிகழ்வின்போது மின் துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி, உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு.ஜி.முத்துசாமி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

*****

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.